திரு. சு. துரைசாமி : புது ஆலைகள் தொடங்குவதற்கு இப்போது ஆலோசனை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதுத் தொழிற்சாலைகள் தொடங்கப்படாததற்குக் காரணங்கள் என்ன? ஏற்கனவே தமிழ்நாட்டில் இருக்கிற சிமெண்ட் ஆலைகள் போதும் என்ற அடிப்படையிலா? அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் உள்ள ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகளில் 28 லட்சம் டன் உற்பத்தி செய்கிறார்கள். நம் தமிழ்நாட்டின் தேவை 12 லட்சம் டன்தான். புதிதாகத் தொடங்குவதென்றால் சுண்ணாம்புக் கற்கள் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு ஆண்டுகள் போதுமானதாக இருக்கும், புதுத் தொழிற்சாலைகள் வந்தால் அதனால் பாதிக்கப்படுமா என்று ஆராய்ச்சி செய்து முடிவு செய்யவேண்டும்.

Film shows in Madras Central Jail

* 492 *Q*.—THIRU N. DENNIS : Will he Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether film shows have been organised in the Madras Central Jail in 1973 (till August 1973);

(*b*) if so, the details thereof; and

(*c*) the criteria on which these films are selected?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ)—

தொடர் எண்.	திரைப் படத்தின் பெயர்.	திரையிடப்பட்ட நாள்.	திரையிட யார் ஏற்பாடு செய்தார்கள் என்பது.
1.	கப்பலோட்டிய தமிழன்	14—1—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை—4.
2.	வா ராஜா வா	27—1—73	டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள், சென்னை.
3.	ஆராதனா	4—2—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை—4.
4.	நெஞ்சிருக்கும் வரை	13—4—73	சிறைச்சாலைத் துறை.
5.	சூதாட்டம்	15—8—73	மயிலாப்பூர் அகாடமி, சென்னை—4,

1973 நவம்பர் 29]

2. நன்கொடை வழங்கும் நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியோரின் ஆதரவில் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் திரைப் படங்கள் திரையிட ஏற்பாடு செய்யப்படுகிறது. திரையிடப்படு வதற்குக் கிடைக்கக்கூடிய திரைப்படங்களின் பட்டியல் ஒன்றை அவர்கள் கொடுப்பதன் பேரில், சிறைக் கண்காணிப்பாளர் திரை யிடப்படுவதற்குரிய படங்களில் ஒன்றை தமது விருப்புரிமைப் படித் தெரிந்தெடுக்கிறார்.

திரு. என். டென்னிஸ் : டெவலப்மெண்டு பீல்டு ஆக்டிவிடீஸ், நல்லொழுக்கம் போன்ற காட்சிகள் மாத்திரம் காட்டப்படு கின்றனவா ? சென்னை மத்திய சிறையில் மாத்திரம் அல்லாது மற்ற சிறைகளுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரைப்படங்களில் நல்லொ ழுக்கம் அதிகமாக இருக்கின்ற படம் இருக்கின்றதா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. எல்லாம் கலந்து தான் வருகிறது. திரைப்படக் காட்சிகளிலே அவர்கள் அதைப் பரிசீலித்து எது எது சிறைச்சாலைகளிலுள்ளவர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கிறதோ அதைக் காட்ட ஏற்பாடு செய்வார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : இப்பொழுது மத்திய சிறையில் திரைப் படக் காட்சிகள் மாத்திரம் காட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறையாவது சமூக நாடகங்களை அங்கே காட்டுவதற்கு ஏற்பாடு செய்வது பற்றி அரசு யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச்சாலைகளில் புல வர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கதை வசனகர்த்தாக்கள், நாடகம் எழுதுகிறவர்கள் இவர்களெல்லாம் இருப்பதைப் பார்த்தேன். அவர்கள் அதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதற்கு இப்பொழுதே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : சிறைச்சாலைகளில் ஆடவர்கள் தனியாக இருக்கிற நிலையிலே அங்கு காட்டப்படுகிற திரைப் படங்கள் காதல் காட்சி பெரும்பாலும் இல்லாத வகையில் ஒழுக்க நெறியை உண்டாக்குகின்ற வகையில் காட்டப்படுமா ? அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ் நாட்டில் தயாரிக்கப் படும் படங்களில் காதல் காட்சி இல்லாத படம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. காதல் இல்லாவிட்டால் படமே ஓடாது என்ற நிலைதான் தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்த இடத்தில் காதல் காட்சியை மட்டும் படத்திலிருந்து எடுத்து விட்டு காண்பிக்க முடியாது என்று நினைக்கிறேன்.

Canteens in Central Jails

* 493 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Indusries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up canteens in the Central Jails in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 494, 495, 496, 497, 498 எண் ணுள்ள கேள்விகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

Exchange of views between Madras and Volgograd Councils

* 499 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether exchange of films, photographic exhibits, tape recorded folk and popular songs and materials relating to town planning are to be exchanged by an agreement between the Madras City Council and Volgograd Council in U.S.S.R.; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.